# வாக்குமூலம்
## முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 59/2024 |
| வழக்கு சாட்சி | : | PW4 |
| நாள் | : | 18.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கராசு | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> :

நான் சுந்தரராஜபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்கிறேன். வழக்கில் இறந்த நபர் யுவராஜ் அவர் எனக்கு மாமா முறை ஆகும். என் மாமா மகன் யுவராஜ்ம் சித்தி மகள் காயதிரியும் திருமணம் நடந்தது. 18.02.2023 அன்று இரவு 8.00 மணிக்கு கயினிக்கு தண்ணீர் பாய்ச்ச போனே திரும்பி வரும் போது மணி 11.45 ஆகும். யுவராஜ்-ன் வீட்டின் பக்கத்தில் வரும் வழியில் மூன்று நபர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் மது அருந்தியிருந்தார்கள். யார் என்று கேட்டேன். அவர்கள் எந்த பதிலும் செல்லவில்லை. கொஞ்சம் துரத்தில் இரண்டு வண்டிகள், சிறியது ஒன்று பெரியது ஒன்று. அதன் பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அடுத்த நாள் காலை கிராமத்தில் மக்கள் அழுதுக்கொண்டிருந்தார்கள். யுவராஜ் கொலை செய்துள்ளதாக கூறினார்கள். நான் யுவராஜ் வீட்டிற்கு வந்தேன். அதன் பிறகு போலிசாரிடம் புகார் கொடுத்தார்கள். இரண்டு நாள் கழித்து எதிரிகள் நான்கு பேரை போலிசார் யுவராஜ் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். வீட்டில் உள்ளே இருந்து காயத்திரி தலையணையை எடுத்து போலிசாரிடம் கொடுத்தார். போலிசா என்னை அழைத்து நீ பார்த்த மூன்று பேர் இவர்களா என்று கேட்டார். அது மாதிரி

தான் உள்ளது என்று சொன்னேன். அதே போல் இரு சக்கர வண்டியை காண்பித்து இதுவா பார் என்று சொன்னார்கள். நான் ஆமாம் என்று சொல்லி அடையாளம் காட்டினேன். அதன் பிறகு போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். இந்த தகவலை சென்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.02.18 10:16:50 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 59/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 5 |
| நாள் | : | 18.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லோகநாதன் | ஜாதி | : | |
| தந்தை- பெயர் | : | முனுசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் சோளிங்கர் தாலுக்கா மண்ணார்சாமி கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்த யுவராஜ் எனது தாய்மாமன் ஆவார். எதிரி காயத்திரி எனது சித்தி மகள். அவர்களுக்கு திருமணம் நடந்து சுந்தரராஜபுரம் கிராமத்தில் வசித்து வந்தனர். ஆஜர் எதிரி முதலில் திருவள்ளூரில் செவலியராக இருந்து பின் திருத்தணியில் செவலியராக பணிபுரிந்து வந்தார். இருவருக்கும் கருத்து வேறுபாடு இருப்பதாக அடிக்அடி மற்றவர்கள் கூறுவார்கள். சுமார் 3 வருடம் முன்பு, மாதம், தேதி ஞாபகமில்லை. காலை 7 மணிக்கு என்னுடைய மாமா போன் செய்து யுவராஜ் இறந்துவிட்டதாக சொன்னார். நான் வந்து பார்த்த போது அவருக்கு கழுத்தில் மார்பில், காயங்கள் இருந்தது. இது சம்மந்தமாக புகார் கொடுத்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.02.18 10:17:17 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.